செ.வெ.எண்:46 நாள்:21.12.2018

கரூர் மாவட்டம்

**முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் போல கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்களை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த வாய்ப்பை சிறுபான்மையின மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு மாநில சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் அவர்கள் ஆகியோர் தகவல்.**

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பேராயர் டாக்டர். மா.பிரகாஷ் அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று(21.12.2018) சிறுபான்மையின மக்களிடம் ஆலோசனை மற்றும் கருத்துக்கேட்புக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையத்தலைவர் ஆகியோர் தெரிவித்தாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் செயல்படுவதை போல் கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கங்களை உருவாக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதனடிப்படையில் சங்கங்களை உருவாக்கி 1 பங்கு நன்கொடையாக பெற்று அதே அளவு 2 பங்கு அரசிடம் தொகை பெற்று கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, கண்கண்ணாடி, மகப்பேறு உதவித்தொகை உள்ளிட்டவைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். 10 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை பழுது நீக்குவதற்கு ரூ.3 இலட்சம் வரை அரசு நிதி வழங்குகிறது. கிறிஸ்தவர்கள் அதை பயன்படுத்திக்கொள்ள வெண்டும்.

பள்ளி படிப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை மத்திய அரசு மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அந்த வகையில் தமிழகத்தில் ரூ.134 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் பிற மாநிலங்கள் பயன்படுத்தாத நிதியை பெற்று வழங்கி தமிழகம் முன்னொடி மாநிலமாக திகழ்கிறது. கல்வி உதவித்தொகையை பெறுவது குறித்தும் சிறுபான்மையின மக்களுக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை குறித்தும் மாணவர்களிடையெ விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பள்ளிகளுக்கு 2 ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுத்து கணினியில் பயிற்சி அளித்து பள்ளி வாரியாக சிறுபான்மையின மாணவர்களை கண்டறிந்து விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சிறுபான்மையின நிறுவனங்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.50 இலட்சம் அரசு நிதி வழங்குகிறது. அயல்நாட்டில் உயர்கல்வி திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் வட்டியில்லா கடனாக வழங்கி உயர்கல்வி பழக்க வழிவகை உள்ளது. புத்தெழுச்சி திட்டத்தின் கீழ் உயர்பதவிகளுக்கான முதற்கட்ட தேர்வு (Prelimibary Exam) முடித்த பின் இரண்டாம்கட்ட தேர்வு (ஆயபை நுஒயஅ) எய்துவதற்கு பயிற்சி பெற ரூ.1 இலட்சம் உதவித்தொகையும், தொகுதி-1 தேர்வுக்கு ரூ.50,000 நிதியும் வழங்கப்படுகிறது. புதிய வெளிச்சம் திட்டத்தின் கீழ் கிராமப்புறத்திலுள்ள சிறுபான்மையின பெண்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டுவதற்காக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கிராமத்தில் 25 சதவீதம் சிறுபான்மையின மக்கள் இருந்தால் அதை பதிவு செய்து கிராமத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மாநில அரசு நிதியில் ரூ.10 கோடி வரை பெற முடியும். அதற்கு மேல் தேவைப்பட்டால் மத்திய அரசின் நிதியும் பெற முடியும். எனவே, சிறுபான்மையின மக்கள் தங்களுக்கு அரசு ஒதுக்கியுள்ள சலுகைகளை தெரிந்து கொண்டு பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தின் மூலம் 124 பயனாளிகளுக்கு ரூ.211,650 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளால் சிறுபான்மையின மக்களுக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களை அறிந்து முறையாக விண்ணபித்து அனைவரும் பயன்பெறவேண்டும்.இவ்வாறு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் மாநில சிறுபான்மையினர் நல தலைவர் ஆகியோர் தெரிவித்தனர்.

பின்னர் உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தின் மூலம் 9 பயனாளிகளுக்கு ரூ.53500/- மதிப்பிலான பல்வேறு நிதிஉதவிகளையும், சிறுபான்மையினர் சமூகத்தினை சேர்ந்த 24 பயனாளிகளுக்கு ரூ.1,20,000/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்கள் என 33 பயனாளிகளுக்கு ரூ.1,73,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், உலமாக்கள் பணியாளர் நலவாரியத்தின் மூலம் 4 நபர்களுக்கு புதிய உறுப்பினர் அடையாள அட்டைகளையும் வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாநில சிறுபான்மையினர் நல ஆணைய உறுப்பினர் திரு.கே.கலாமணி, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பாஸ்கரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.த.குமரேசன், சிறுபான்மையின நல பிரதிநிதிகள் திரு.ஜோசப், திரு.சாகுல் அமீது, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் திரு.காளியப்பன், திரு.திருவிக, திரு.கிருஷ்ணன், திரு.ஜெயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.